## August 28, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. 2030-ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்த இந்தியா விருப்பம் தெரிவித்திருக்கும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை அதற்கு ஒப்புதல் வழங்கியது. போட்டிகளை நடத்துவதற்கான சிறந்த நகரமாக, அகமதாபாதையும் அமைச்சரவை பரிந்துரைத்துள்ளது.

   i. காமன்வெல்த் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை பெறுவதற்கான ஏலத்தில் பங்கேற்கும் விண்ணப்ப நடைமுறைகளை நிறைவு செய்ய, வரும் 31-ஆம் தேதியே கடைசி நாளாகும்.
   ii. கிளாஸ்கோவில் நவம்பர் மாதம் கூடும் காமன்வெல்த் விளையாட்டு பொதுச் சபை, 2030-ஆம் ஆண்டு போட்டிகளை நடத்தும் வாய்ப்பை எந்த நாட்டுக்கு வழங் குவது என்பதை இறுதி செய்யும்.
   iii. நிதிச் சிக்கலை காரணமாகக் கூறி ஏலத்துக்கான போட்டியிலிருந்து கனடா விலகியதால், போட்டியை நடத்தும் வாய்ப்பு இந்தியாவுக்கு கிடைக்கும் நம்பிக்கை அதிகரித்துள்ளது.
   iv. 2036 ஒலிம்பிக் போட்டிகளை நடத்த இந்தியா விருப்பம் தெரிவித்திருக்கும் நிலையில், அதற்கான ஒரு முன்னோட்டமாக இந்தப்போட்டி இந்தியாவுக்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.
   v. கடைசியாக இந்தியா, 2010– இல் தில்லியில் காமன்வெல்த் போட்டிகளை நடத்தியது. அதற்காக ரூ.1,600 கோடி பட்ஜெட் திட்டமிடப்பட்ட நிலையில், பல மடங்கு அதிக மாக ரூ.70,000 கோடியை இந்தியா அதற்காக செலவிட்டது குறிப்பிடத்தக்கது.

2. இந்தியாவில் முதல்முறையாக நடைபெறவுள்ள உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில் பங்கேற்க, தமிழகத்தின் உயரம் தாண்டுதல் வீரர் டி.மாரியப்பன் உள்பட, 73 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.
3. கிரீன்லாந்தை தங்கள் நாட்டில் இருந்து பிரித்து அமெரிக்காவில் இணைக்க அந்தத் தீவு மக்களிடையே அமெரிக்கர்கள் ரகசிய பிரசாரங்களில் ஈடுபடுவதாகக் கூறப்படும் விவகாரத்தில், அமெரிக்க துணைத் தூதர் மார்க் ஸ்ட்ரோவை டென்மார்க் அரசு நேரில் அழைத்து கண்டனம் தெரிவித்துள்ளது.
4. வரதட்சிணைக் கொடுமை ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பெண்களின் உயிரைப் பறித்து வருகிறது. தேசிய குற்ற ஆவணக் காப்பக (என்சிஆர்பி) புள்ளிவிவரத்தின்படி, 2020- ஆம் ஆண்டு 7,045 பெண்கள் வரதட்சிணை கொடுமையால் உயிரிழந்தனர். இந்த எண்ணிக்கை 2022-ஆம் ஆண்டு 6,516-ஆக சரிந்தது என்றாலும்கூட, அதனால் ஆறுதல் அடைய முடியாது.

   i. 2022-ஆம் ஆண்டு வரதட்சிணைக் கொடுமையால் அதிகபட்சமாக உத்தர பிரதேசத்தில் 2,142 பெண்கள் உயிரிழந்தனர். அதற்கு அடுத்து பிகாரில் 1,057, மத்திய பிரதேசத்தில் 520, ராஜஸ்தானில் 451, மேற்கு வங்கத்தில் 427 பெண்கள் உயிரிழந்தனர்.

ii. என்சிஆர்பி புள்ளிவிவரத்தின்படி, கடந்த 2022-ஆம் ஆண்டு திருமணமான பெண்ணை துன்புறுத்தியதாக அவரின் கணவர் அல்லது உறவினர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் 498ஏ பிரிவின் கீழ், நாட்டில் 1,44,593 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.அந்த ஆண்டில் வரதட்சிணைக் கொடுமையால் 6,500-க்கும் மேற் பட்ட பெண்கள் உயிரிழந்தனர். அத்துடன் ஒப் பிடுகையில், திருமணமான பெண்ணை துன் புறுத்தியதாக கணவர் அல்லது உறவினர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண் ணிக்கை 20 மடங்குக்கு மேல் அதிகமாகும்.

iii. இதற்கு எதிராக வரதட்சிணை தடைச் சட்டம் முதல் இந்திய தண்டனைச் சட்டத்தின் 304பி வரை சட்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், அவற்றை அமல்படுத்தும் நடவடிக்கைகள் பலவீனமாக உள்ளன.

iv. இவற்றுடன் ஒப்பிடுகையில் என்சிஆர்பி புள்ளி விவரங்களின்படி கேரளம், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் வரதட்சிணைக் கொடுமையால் பெண்கள் உயிரிழப்பது மிகக் குறைவாக இருந்தாலும், இந்தக் கொடுமையை முற்றிலும் ஒழிப் பதற்கான சாத்தியம் மிகத் தொலைவில் உள்ளது.

5. எகிப்தில் நடை பெறவுள்ள 'பிரைட் ஸ்டார்' கூட்டுப் பயிற்சியில் இந்திய ஆயுதப்படைகளைச் சேர்ந்த 700-க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

i. கடந்த 1980-ஆம் ஆண்டுமுதல் அமெரிக்காவுடன் சேர்ந்து 'பிரைட் ஸ்டார்' கூட்டுப் பயிற்சியை எகிப்து நடத்தி வருகிறது.

ii. இந்நிலையில், நிகழாண்டு ஆக.28 முதல் செப்.10 வரை, அந்தப் பயிற்சி நடைபெற உள்ளது. இதில் இந்திய ஆயுதப் படைகள் மற்றும் ஒருங்கிணைந்த பாதுகாப்பு அலுவலர் தலைமையகத்தைச் சேர்ந்த 700 பேர் பங்கேற்க உள்ளனர்.

iii. இந்தப் பயிற்சியில் இந்திய ஆயுதப் படைகள் பங்கேற்பது பிராந்திய அமைதி, ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு, நட்பு நாடுகளுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்டவற்றுக்கு இந்தியா முக்கியத்துவம் அளிப்பதை எடுத்துரைக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

6. இந்திய ஏற்றுமதிப் பொருள்கள் மீதான அமெரிக்காவின் கூடுதலாக அறிவித்த 25 சதவீத வரி அமலுக்கு வந்த நிலையில் மாற்று ஏற்றுமதிக்கான வாய்ப்புகளைத் தேடும் பணியில் வர்த்தக அமைச்சகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

i. குறிப்பாக இந்திய ஜவுளியை ஏற்றுமதி செய்ய 40 நாடுகளை மத்திய அரசு அடையாளம் கண்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அந்த நாடுகள் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, ஓசியானியா கண்டத்தில் இருப்பதாகவும், அவை உலகளாவிய ஜவுளி மற்றும் ஆடைக்கான தேவையில் நான்கில் மூன்று பங்கை கொண்டிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் கூறின.

ii. கடந்த 2021-22-ஆம் ஆண்டு முதல் இந்தியாவிடம் இருந்து அதிக

மதிப்பாலான பொருள்களை இறக்குமதி செய்யும் நாடாக அமெரிக்கா உள்ளது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவிடம் இருந்து இறக்குமதி செய்யும் பொருள்களைவிட சுமார் இரண்டு மடங்கு அளவுக்கு மதிப்புக்கு அந்நாட்டுக்கு இந்தியா ஏற்றுமதிசெய்து வருகிறது.

7. தெருவோர கடைக்காரர்களுக்கான பிரதமரின் கடன் திட்டத்தில் (பிஎம் ஸ்வநிதி) வழங்கப்படும் தவணைக் கடன் நிதி ரூ.5 ஆயிரம் உயர்த்தியும், வரும் 2030-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி வரை திட்டத்தை நீட்டித்தும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
   i. பிஎம் ஸ்வநிதி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ், தெருவோர கடைக்காரர்களுக்கான முதல் தவணைக் கடன் வரம்பு ரூ. 10,000 என்ற அளவிலிருந்து ரூ. 15,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதுபோல, இரண்டாம் தவணைக் கடன் ரூ.20,000-லிருந்து ரூ. 25,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மூன்றாம் தவணைக் கடன் முன்பிருந்தது போல ரூ. 50,000 என்ற அளவிலும் வழங் கப்படும்.

8. 2026- ஆம் ஆண்டு இறுதிக்குள் குலசேகரன்பட்டினத்திலிருந்து ராக்கெட் ஏவப்படும் என்று இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் தெரிவித்தார்.
   i. இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ நமது நாட்டு செயற்கைக்கோள்களை மட்டுமன்றி, உலக நாடுகளின் செயற்கைக் கோள்களையும் குறைந்த கட்டணத்தில் விண்ணில் ஏவி வருகிறது.
   ii. இந்த நிலையில், ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவுக்கு அடுத்தபடியாக, குலசேகரன்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கு 2,233 ஏக்கரில் இடம் தேர்வு செய்யப்பட்டது.
   iii. இந்த நிலையில், ராக்கெட் ஏவுவ தற்கான தளம் அமைக்க அடிக்கல்நாட்டு விழா நடை பெற்றது.

9. ரஷியாவின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை கள் மற்றும் கிடங்குகளைக் குறிவைத்து உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்திவருவதால் அந்த நாட்டின் சில பகுதிகளில் எண்ணெய் விலை வெகுவாக அதிகரித்துள்ளது.